# விடியல்

## The Dawn

மாத இதழ், பொழுது – 51
ஜூலை, 2013
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



சிறப்பாசிரியர்
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

ஆசிரியர்
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

இணை ஆசிரியர்
முனைவர் ப. சரவணன்
தமிழ் உதவிப் பேராசிரியர்

ஆசிரியர் குழு
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்
அனைவரும்



வெளியீடு:

தமிழ்த்துறை

கே.எஸ். ரங்கசாமி
கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
தமிழ்நாடு, இந்தியா.
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu



© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.


## இந்த இதழில்

50ஆவது இதழினைக் கடந்த இத் தருணத்தில் ‘விடியல்’ தன்னுடைய படைப்புப் பாதையைப் புதுப் பித்துக்கொள்ள விளைகிறது.

புதிய கருத்துக்கள், புதிய களங்கள், புதிய படைப்பாளர்கள் எனத் தன் பயணத்தைத் தொடர வுள்ளது.

புதிதாகக் கல்லூரிக்கு வந்துள்ள முதலாமாண்டு மாணாக்கர்களைப் படைப்பாளர்களாக உருவாக்க விடியல் பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டுள்ளது.

இம்மாதம் ‘கார்கில் போர் வெற்றி தினம்’ மற்றும் ‘உலக மக்கள் தொகை தினம்’ ஆகியன கொண் டாடப்படவுள்ளன. அத் தினங்கள் குறித்த தகவல்களைக் கவிதையாக, கட்டுரையாக இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த இதழில் படைப்புகளை வழங்கிப் பங்களிப்புச் செய்தவர்கள் **எண்ணிக்கை: 46**

மாணாக்கர்கள்:**43**

ஆசிரியர்கள்:**03**

இவர்கள் அனைவருக்கும் விடியலின் நன்றி!

**இவ் இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துகளையும் அறிவுரைகளையும் எங்களுக்குத் தெரிவித்துதவவும்** -ஆசிரியர்

# உள்ளடக்கம்

## கட்டுரைகள்


| | |
|---|---|
| புதிய பூமிகள் | 03 |
| புவிவெப்பமயமாதல் | 04 |
| India's Population 2013 | 05 |
| யானை | 15 |
| ஒரு துளி இரத்தம் | 16 |
| புனித தீர்த்தம் தயாரித்தல் | 22 |
| சுவாமி விவேகானந்தர் | 24 |
| கார்கில் போர் | 28 |
| நான்காம் தமிழ்ச்சங்கம் | 29 |


## கவிதைகள்


| | |
|---|---|
| கைகள் | 06 |
| நட்பு | 06 |
| நட்பு | 07 |
| நட்பின் இலக்கணம் | 07 |
| அன்பு | 08 |
| மழையே வா | 08 |
| அன்பு | 08 |
| பூமியின் ரணங்கள் | 09 |
| அன்பு | 09 |
| வறுமையின் துயரங்கள் | 09 |
| அன்பு எங்கே? | 10 |
| தன்னம்பிக்கை | 11 |
| நம்பிக்கை | 11 |
| சுதந்திரம் | 11 |
| மனிதநேயம் | 12 |
| அன்பு | 12 |
| தன்னம்பிக்கை | 12 |
| அழிக்கப்படும் இயற்கை | 12 |
| அம்மா | 13 |
| எழுந்திரு பெண்ணே | 13 |
| நட்பு | 14 |
| கூட்டுப்புழுக்கள் | 14 |
| நாளை | 15 |
| முயற்சி | 15 |
| தந்தைநேசம் | 16 |
| நட்பு | 21 |
| அம்மா | 21 |
| பாசம் | 21 |
| அப்பா | 21 |
| தாய் | 21 |
| வனம் | 21 |
| அதிசயம் | 23 |
| மரம்வளர்ப்போம் | 23 |
| கவிதை எழுதினேன் | 23 |
| நட்பு | 23 |
| நட்பு | 23 |
| தன்னம்பிக்கை | 23 |
| பூமொழி | 27 |
| இனிய வாழ்வு | 27 |
| கவனம் | 27 |


## குறுங்கதை


| | |
|---|---|
| கல்வியின் குறிக்கோள் | 24 |


## சங்கச் சாரல் - 16


| | |
|---|---|
| மொழியும் வாழ்வும் | 17 |

# பகவத்கீதை

ஜடவுடல் என்னும் ரதத்தில் பயணியாக ஆத்மாவும் சாரதியாக புத்தியும் ஓட்டும் உபகரணமாக மனமும் குதிரைகளாகப் புலன்களும் உள்ளன. இவ்வாறு மனம் மற்றும் புலன்களின் சேர்க்கையால் ஆத்மா இன்ப, துன்பத்தை அடைகிறது.

பழைய ஆடைகளைப் புறக்கணித்து, புதிய ஆடைகளை ஒருவன் அணிவதைப் போன்றே பழைய உபயோகமற்ற உடல்களை நீக்கி, புதிய உடல்களை ஆத்மா ஏற்கின்றது.

பிறப்பு, இறப்புக்கு இடைப்பட்ட இந்தப் பயணத்தில் ஆத்மாவையும் மனத்தையும் புலன்களையும் நல்வழியில் செலுத்துபவன் இன்பத்தைப் பெறுகிறான். தீயவழியில் செலுத்துபவன் துன்பத்தை அடைகிறான். எனவே, நல்வழியில் சென்று இன்பத்தைப் பெற வேண்டும்.

இவ்வாறு உடல் அழிந்தாலும் ஆன்மாவிற்கு அழிவில்லை. எனவே, நல்வழியில் சென்று ஆன்மாவைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**எம். தீபிகா**
இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு
ஆ பிரிவு

# புதிய பூமிகள்

விண்வெளியில் உள்ள ஒரு நட்சத்திரத்தை 'சூப்பர் எர்த்ஸ்' என அழைக்கப்படும் மூன்று கோள்கள் சுற்றிவருவதை ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித் துள்ளனர்.

சூரிய மண்டலத்திற்கு அருகே ஸ்கார்பியோ நட்சத்திர தொகுப்பில் இருக்கும் கிளைஸ் 667சி நட்சத்திரம் ஒன்றினை மூன்று 'சூப்பர் எர்த்ஸ்' கோள்கள் சுற்றிவருவதை ஹார்ப்ஸ் தொலை நோக்கி வழியாகக் கண்டு பிடித்துள்ளனர்.

ஐரோப்பிய சதர்ன் ஒப்செர் வேடரி ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்ட இந்தத் தொகுப்பில் வெப்பநிலை காரணமாக அங்குத் தண்ணீர் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இது குறித்து கூறிய ஆராய்ச்சியாளர் ஒருவர், இந்த 'சூப்பர் எர்த்ஸ்' கோள்கள் நமது பூமியில் உள்ள பாறையை போன்று நிலப்பரப்புடன் இருக்கும். உயிர்

*வாழ சாத்தியகூறுகள் உள்ள கோள்களை கண்டறிவது மகிழ்ச்சியை அளிக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.*

*விண்வெளியில் உள்ள கோள்களில் பூமியை விடக் கூடுதல் எடையுடனும், யுரானஸ் மற்றும் நெப்டியூன் கோள்களை விட குறைந்த எடையுடனும் உடைய இந்த 'சூப்பர் எர்த்ஸ்' கோள்களில் உயிர் வாழ சாத்தியகூறுகள் உள்ளதாக் ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்திருப்பது குறிப்பிடத் தக்கது.*

***கு. காயத்ரி***

*இளங்கலை வேதியியல் மூன்றாமாண்டு*

# புவி வெப்பமயமாதல்

*பூமி வெப்பமயமாதல் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில் தற்போது, பூமியின் வெப்பம் நான்கு அணுகுண்டுகள் வீசினால் ஏற்படும் அளவிற்கு உள்ளதாகத் தெரிய வந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.*

*ஆஸ்திரேலியாவில் உள்ள குவின்ஸ்லாந்து பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பூமி வெப்பமயமாதல் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். அதில் எப்போதும் இல்லாத அளவு தற்போது பூமியின் மீது வெப்பம் தாக்குவது தெரியவந்துள்ளது.*

*குவின்ஸ்லாந்து பல்கலைக்கழக விஞ்ஞானி ஜான்குக் என்பவர் பூமி வெப்பமயமாதல் குறித்த ஆய்வினை மேற்கொண்டார்.*

*இந்த ஆய்வில் கார்பன்-டை-ஆக்சைடு உட்பட கிரீன் ஹவுஸ் காசஸ் அதிக அளவில் பூமியின் மேற்பரப்பில் படிந்து இருப்பதே பூமி அதிக வெப்பமாவதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.*

*இந்த வெப்பம் எந்த அளவிற்கு உள்ளதென்று பார்க்கும்போது, ஹிரோஷிமா மீது வீசப்பட்ட அணுகுண்டுகள் போல நான்கு அணுகுண்டுகள் வீசினால் ஏற்படும் அளவுக்கு வெப்பம் அதிகரித் துள்ளது எனத் தெரிகிறது.*

*மேலும், இந்த வெப்பம் பூமியை ஒவ்வொரு வினாடியும் தாக்குகிறது என்றும் பூமியைத் தாக்கும் 90 சதவீதம் வெப்பம் கடல்களைப் பாதிக்கின்றன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.*

***மு. சௌந்தர்யா***

*இளங்கலை வேதியியல் மூன்றாமாண்டு*

## India's Population 2013

*The world population has grown tremendously over the past two thousand years. In 1999, the world population passed the six billion mark. Latest official current world population estimate, for mid-year 2011, is estimated at **7,021,836,029**.*

| | |
|---|---|
| *Current Population of India in 2013* | *1,270,272,105 (1.27 billion)* |
| *Total Male Population in India* | *655,875,026 (655.8 million)* |
| *Total Female Population in India* | *614,397,079 (614.4 million)* |
| *Sex Ratio* | *940 females per 1,000 males* |

***Currently, there are about 51 births in India in a minute.***

***Current Population of India** - India, with 1,270,272,105 (1.27 billion) people is the second most populous country in the world, while China is on the top with over 1,360,044,605 (1.36 billion) people. The figures show that India represents almost 17.31% of the world's population, which means one out of six people on this planet live in India. Although, the crown of the world's most populous country is on China's head for decades, India is all set to take the numero uno position by 2030. With the population growth rate at 1.58%, India is predicted to have more than 1.53 billion people by the end of 2030.*

*More than 50% of **India's current population** is below the age of 25 and over 65% below the age of 35. About 72.2% of the population lives in some 638,000 villages and the rest 27.8% in about 5,480 towns and urban agglomerations. The birth rate (child births per 1,000 people per year) is 22.22 births/1,000 population (2009 est.) while death rate (deaths per 1000 individuals per year) is 6.4 deaths/1,000 population. Fertility rate is 2.72 children born/woman (NFHS-3, 2008) and Infant mortality rate is 30.15 deaths/1,000 live births (2009 estimated). India has the largest illiterate population in the world. The literacy rate of India as per 2011 Population Census is 74.04%, with male literacy rate at 82.14% and female at 65.46%. Kerala has the highest literacy rate at 93.9%, Lakshadweep (92.3%) is on the second position and Mizoram (91.6%) is on third.*

*Every year, India adds more people than any other nation in the world, and in fact the individual population of some of its states is equal to the total population of many countries. For example, Population of Uttar Pradesh (state in India) almost equals to the population of Brazil. It, as per 2001 Population Census of India, has 190 million people and the growth rate is*

16.16%. The population of the second most populous state Maharashtra, which has a growth rate of 9.42%, is equal to that of Mexico's population. Bihar, with 8.07%, is the third most populous state in India and its population is more than Germany's. West Bengal with 7.79% growth rate, Andhra Pradesh (7.41%) and Tamil Nadu (6.07%) are at fourth, fifth and sixth positions respectively. The sex ratio of India stands at 940. Kerala with 1058 females per 1000 males is the state with the highest female sex ratio. Pondicherry (1001) is second, while Chhatisgarh (990) and Tamil Nadu (986) are at third and fourth places respectively. Haryana with 861 has the lowest female sex ratio.

Some of the reasons for **India's rapidly growing population** are poverty, illiteracy, high fertility rate, rapid decline in death rates or mortality rates and immigration from Bangladesh and Nepal. Alarmed by its swelling population, India started taking measures to stem the growth rate quite early. In fact India by launching the National Family Planning program in 1952 became the first country in the world to have a population policy. The family planning program yielded some noticeable results, bringing down significantly the country's fertility rate. In 1965-2009, the contraceptive usage more than tripled and the fertility rate more than halved. The efforts did produce positive results, however, failed to achieve the ultimate goal and the population of India since getting independence from Britain in 1947 increased almost three times. Whereas India has missed almost all its targets to bring the rate of population growth under control, China's 'One Child Policy' in 1978, has brought tremendous results for the latter. The policy claims to have prevented between 250 and 300 million births from 1978 to 2000 and 400 million births from 1979 to 2010.

**M.Sugeetha**
III B.Sc. Chemistry

# கைகள்

''அழகான கைகள்
முதிர்ந்த கைகள்
தரையைத் தூய்மைப்படுத்தும்
கைகள்
சமைக்கின்ற கைகள்
பாத்திரம் துலக்குகின்ற கைகள்
எழுதுகின்ற கைகள் எனக்
கைகள் மாறினாலும்
அவற்றின் பணி மாறுவதில்லை.
யாரோ ஒருவருக்காக
எப்போதுமே பணிபுரிகின்றன.

**மூ. விவேக்குமார்**
இளங்கலை வணிகவியல் (கணினி
பயன்பாடு) மூன்றாமாண்டு ஆ பிரிவு

# நட்பு

''ஆண்பால்
பெண்பால்
பொதுவானது நட்பால்''

**பெ. லோகநாதன்,**
இளங்கலை வேதியியல்துறை முதலாண்டு

# நட்பு

*''கருவறையில் உருவானோம்*
*கல்லூரியில் ஒன்றானோம்*
*நட்பெனும் உறவு கலந்தோம்*
*இன்று காலத்தால் பிரிகின்றோம்*
*கண்ணீரில் நாம் மிதக்கின்றோம்*
*உடல் மட்டும் செல்லும்*
*உள்ளம் இங்கேயே நிற்கும்*
*நட்பு ஆன்மாவிலும் தொடரட்டும்*
*அங்கேயும் அது மலரட்டும்''*

**பெ. லோகநாதன்**
*இளங்கலை வேதியியல் முதலாண்டு*

# நட்பின் இலக்கணம்

*''புரியாத பிரியம்*
*பிரியும் போது*
*புரியும் - நம்*
*நட்பைப்போல.*

*பழகும்முன் தனிமை*
*பழகியபின் இனிமை*
*பிரியும்போது கொடுமை*
*பிரிய வேண்டிய நிலைமை*
*பிரிந்த பின் தெரியும்*
*நம் நட்பின் அருமை.*

*உன்னோடு சண்டையிட ஆயிரம்*
*காரணங்கள் - உன்னோடு*
*சமாதானம்பேச ஒரே*
*காரணம் - அது நம் நட்பு.*

*கலங்கிய கண்களை நேசி*
*நேசித்த கண்களைக் கலங்க*
*வைக்காதே என்*
*வீட்டுத் தோட்டத்தில்*
*ஆயிரம் பூக்கள் பூத்திருந்தாலும்*
*என் நட்புத் தோட்டத்தில்*
*நீ மட்டுமே பூத்தாய்.*

*உன் சந்தோஷங்களில்*
*கைகுலுக்க மறந்தாலும்*
*துன்பத்தில் கண்துடைக்க வருவேன்*
*இதயம் கூட இடைவெளிவிட்டுத்தான்*
*துடிக்கும் அந்த இடைவெளியில்கூட*
*என் மனம்*
*உன்னைத்தான் நினைக்கும்.*

*என்றும் உனை நினைத்திருப்பேன்*
*என்றாவது உனை*
*மறந்திருப்பேனானால்*
*அன்று நான் இறந்திருப்பேன்*
*இனிவரும் காலங்களில்*
*நட்புக்குச் சான்றாக உலகம்*
*நம்மையே காட்டட்டும்''*

**ஏ. கலைவாணி**
*இளங்கலைத் தமிழ் இலக்கியம்*
*முதலாண்டு*

# அன்பு

*“அன்பின் பொருள் புரியுமா?*
*அது விண்மீனைப்போல அற்புதமானது*
*கடல்போல் ஆழமானது.*
*புதையலைப்போல விலைமதிப்பற்றது.*
*வானவில் போல அழகானது.*
*இயற்கை நம் உயிரில் எழுதிய*
*ஓவியப்பரிசு அன்பு”*

**ப. நந்தகுமார்**
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

# மழையே வா!

*“நினைக்கும் பொழுதில்*
*மனத்தில்*
*அலைகளை எழுப்புகின்றாய்.*
*எண்ணும் வேலையில் எனை மறக்கச்*
*செய்கின்றாய்.*
*எண்ணாத போதும்*
*என்னுள் எங்கோ உலவுகின்றாய்.*
*பிரிந்து போனாலும்*
*நினைவுகளாய்ப்*
*பிரியாமல் பற்றிக்கொள்கிறாய்.*
*என்னை நீ*
*கொள்வாயோ? இல்லை*
*என்னை நான் கொல்வேனோ?*
*உன்னைச்*
*சேரிக்காமல் விட்டதனால்*
*இனியும் தாமதிக்க மாட்டோம்.*
*உன்னைச் சேகரிக்க மறக்கமாட்டோம்.*
*மீண்டும் எங்களைப்*
*பார்க்கவும் வாழவைக்கவும் எங்கள்*
*இல்லங்களில் ஒருவனாய்த் துள்ளி*
*விளையாடவும் ஓடிவா!*
*மழையே! நீ எங்கள் இல்லங்களுள்*
*காலெடுத்து, தாளெடுத்து ஓடிவா*
*நாங்கள் உன்னைச் சேகரித்துப்*
*பயன்பெறுகிறோம்”*

**பொ. மோகன்ராஜ்**
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

# அன்பு

*“கலைஞன் கூடக் கல்லில் தான்*
*சிலை வடித்தான்.*
*நானோ*
*என் இதயத்தில் இரத்தத்*
*துளிகளால்*
*சிலை வடித்தேன். உன் அன்பை*
*நாள்தோறும் நீ வரும் பாதையோரம்*
*நின்று காத்திருந்தேன் காணவில்லை*
*உன்னை - தாயாக*
*நீயிருந்து நான் செய்யும்*
*பிழையைப் பிழை எனத் தெரிந்தும்*
*தம் பிள்ளை என உன் அன்பால்*
*அரவணைப்பாய் அன்னையே!*
*நான் முதலில் பாடிய என் தாலாட்டு*
*என்னை விட்டு நீ*
*விலகியதும் உருவானது -*
*வேதனையின் பாரமாக”*

**சௌ. பிரவின்ராஜ்**
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## பூமியின் ரணங்கள்

''மலர்களை முத்தமிடுகிறேன்
மரங்களைத் தொட்டுத் தடவுகிறேன்
மலர்களைக் கட்டித் தழுவி
சங்கீதம் இசைக்கின்றேன்
இலைகளின் நடுவே
சிலிர்த்துப் போகிறேன்
கொடிகளின் நடுவே
குளிர்ந்து போகிறேன்
பூமியின் ரணங்களுக்கு
மருந்தாகிப் போகிற நான்
சில நேரங்களில் பூமிக்கு நானே
ரணங்களாக மாறிவிடுவதை
நினைக்கும்போது
மனிதம் கரைந்து போகின்றது''

**எஸ். இளங்கோவன்**
இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

## அன்பு

''காவலனின் உத்தரவில்
கரம்பிடித்து உறவாகி
கவிதையில் பூ விரும்பும்
காவியத்துக் கலைமரமே!
இலை மறைவில் கனிகளைப் போல்
இதயத்தில் சுவை பிறக்கும்
இதுவென்ன பாதையிலே
இவ்வளவு அன்புத் தலைகள்.
அன்புக்கு விதை தேடி
அனுதினமும் அலைகையிலே
பரிதவித்து இறக்கிறதே
தரைமீனாய்த் தவிக்கையிலே
தமிழ்க்கவிதைத் தீட்டுகிறேன்.
அன்பின் அடையாளமும் கண்டு
அவசரமாய் நுழைகின்றேன்.
அன்பு நதியில் மூழ்கி
ஆண்டவனை வேண்டுகிறேன்''

**எஸ். சதீஸ்**
இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

## வறுமையின் துயரங்கள்

''குழந்தையின் அழுகுரல்
துடிதுடித்தது தாயின் நெஞ்சம்.
கொடுக்கப் பாலும் இல்லை
வாங்கப் பணமும் இல்லை.
செய்வது ஏது தெரியவில்லை
போக ஒரு பாதையுமில்லை
வண்ண வண்ண ஆடைகள்
கண்கவரும் வாகனங்கள்
கைத்தட்டியதும் ஓடிவந்த
வேலைக்காரர்கள்.
அறுசுவை உணவு
ஜொலிக்கும் ஆபரணங்கள்
இப்படியான ஒரு கனவைக் கூடக்
கலைக்கும் - ஒழுகும் ஓலையின்
அடியில் கரையும் வாழ்க்கை.
'வறுமையை ஒழிப்போம்'
என்ற அழகான வாசகத்தைச்
சொல்லி வந்தான்
வறுமையின் வாசல்கூட
அறியாதவன்''

**க. அபிராமி**
இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

# கல்வியின் குறிக்கோள்

*முனைவர் து. சரஸ்வதி*
*தமிழ் உதவிப்பேராசிரியர்*

*ஒரு குருவிடம் மூன்று சீடர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் அவர்களை அழைத்த குரு, 'உங்கள் கல்வி முடிந்துவிட்டது. நீங்கள் வீட்டிற்குச் செல்லலாம்' என்றார். 'குரு நம்மைப் பரிட்சித்துப் பார்க்கவில்லை. எந்தவிதத்திலும் திறமையைச் சோதிக்கவில்லை. எவ்வாறு கல்வி முடிந்துவிட்டது எனக் குரு கூறுகிறார்?' என்று சிந்தித்தவாறு மூவரும் புறப்பட்டனர்.*

*வழியில் ஓரிடத்தில் முள் சிதறிக் கிடந்தது. முதல் மாணவன் ஒரே பாய்ச்சலில் தாண்டி, அந்த இடத்தைக் கடந்து தன் பயணத்தைத் தொடர்ந்தான். அடுத்தவனால் பாய இயலவில்லை. அதனால் முட்களுக்கு இடையே கால் வைக்கும் அளவிற்கு முட்களை அகற்றிவிட்டு, மெல்ல அந்த இடத்தைக் கடந்தான். ஆனால், மூன்றாமவன் பொறுமையாக அந்த முட்கள் அனைத்தையும் பொறுக்கி ஓரமாகப் போட்டுவிட்டு நடந்தான்.*

*அவர்களின் பின்னாலேயே நடந்து வந்து அவர்களின் செயல்களைக் கவனித்த குரு, மூன்றாமவனை அழைத்து 'கல்வியின் முக்கியக் குறிக்கோளே மற்றவர்களின் துன்பத்தைத் துடைக்க வழி காண்பதுதான். எனவே, அந்தக் குறிக்கோளை உணர்ந்த நீ இனிமேலும் படிக்க வேண்டியது எதுவுமில்லை. எனக்கூறி அவனை மட்டும் அனுப்பி விட்டு மற்ற இருவரையும், 'நீங்கள் கற்க வேண்டியது இன்னும் இருக்கிறது' என்றவாறு அவ்விருவரையும் ஆசிரமத்திற்கு அழைத்துச்சென்றார்.*

# அன்பு எங்கே?

*''ஆற்று வெள்ளம் ஓடி மறைந்தபின்*
*அங்கு ஈரமும் காய்ந்தது போல்*
*நேற்று வந்தன போல நீண்டு*
*போயின ஆண்டுகள்.*
*விண்ணில் சிந்திய*
*விண்மீன்களாகியும்*
*மின்னலாகிச் சென்றன்*
*மண்ணில் தோன்றிய கல்லூரி*
*வாழ்க்கை மாயமாகி மறைந்தன.*
*மீண்டும் மீண்டும் வந்திட வந்திட*
*எங்கும் சென்று பார்த்தேன்*
*காணவில்லை அன்பை.''*

***சி. ஹரிபாஸ்கர்***
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## தன்னம்பிக்கை

*"சிந்தனைச் சக்தி எதற்குண்டு?*
*சிந்தனைச் சிற்பியும் நீதானே*
*அறிவும் ஆற்றலும் உனக்குண்டு*
*ஆறாம் அறிவு எதற்குண்டு?*

*அன்பும் பாசமும் அதிகமுண்டு*
*அன்னையும் பிதாவும் அதன் வடிவே*
*பிள்ளையைப் பேணும் பெற்றோரே*
*பெற்றோரைப் போன்று பிறரும்*
*உண்டோ?*

*படைத்தல் காத்தல்*
*இறைவனென்றால்*
*படைக்கவும் காக்கவும் நீ அறிவாய்*
*இரசிக்கும் இரசனை எதற்குண்டு?*

*இரசிக்கும் நாடகங்கள்*
*படைக்கின்றாய்*
*குயிலோசைகோ யாதும் ஈடில்லை*
*வண்டிசைக்கும் ஏதும் எதிரில்லை*
*இரண்டும் எழுப்பும் இசையலைகள்*
*இதயம் சுவரும் இன்சுவை*
*கலைகள் - இவை*
*அனைத்திற்கும் காரணம்*
*தன்னம்பிக்கை"*

***வி. பாரதி***
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## நம்பிக்கை

*"அன்பு என்பது ஒரு நெடுந்தொடர்.*
*வழிகளில் தடை ஏற்பட்டாலும்*
*அதில் ஒருபோதும்*
*பாதை மாறுவதில்லை.*
*மாறினாலும் அது*
*நிலைபெறுவதில்லை.*
*காற்றுப்போல என்றும் உலகில்*
*அழியாத, எவருக்கும் கிட்டாத ஓர்*
*அழகான சுவாசமே அன்பு.*
*அலைகள் ஓய்ந்தாலும் அன்பு எனும்*
*மனக்கடல் ஓய்வதில்லை.*
*மரணம் எனும் சொல் நான்கு*
*எழுத்தைக் கொண்டு முடிவுற்றாலும்*
*உன் மனம் எனும் உலகத்தில்*
*ஏற்படக் கூடிய அன்பு எனும்*
*ஜனனம் மாறுவதில்லை.*
*இப்படிப்பட்ட அன்புக்கு*
*இவ்வுலக உருண்டையே*
*அடிமை."*

***பி. முருகன்***
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## சுதந்திரம்

*"ஒரு வண்ணத்துப்பூச்சியை நீ நேசிப்பது நிஜமெனில் அதைச் சுதந்திரமாய்ப் பறக்கவிடு - அது உன்னை நேசிப்பது நிஜமெனில் நிச்சயம் உன்னிடமே வரும்"*

***ரா. கல்பனா***
*இளங்கலை வேதியியல் முதலாண்டு*

## மனிதநேயம்

''மனிதன் மனிதனை
மதிப்பது மனிதநேயம்.
தீமை செய்பவன் மிருகம்.
அதைத் தட்டிக் கேட்பவன் மனிதன்.
கல்வி அறிவு உள்ளவன்
மனிதன்.
அதைக் கற்றுத் தரும் ஆசிரியர்
மனிதநேயம் உள்ளவர்.
தன்னை மட்டும் பார்ப்பவன்
சுயநலவாதி.
சமுதாயத்தையும் சேர்த்துப்
பார்ப்பவன்தான்
மனிதநேயம் உள்ளவன்.
சாதி என்றும் மதம் என்றும்
பிரித்துப் பார்க்காதே!
அனைவரும் மனிதர்தான் என்று
நினைத்துப்பார்.
அந்த அன்பு ஒன்றே
உன்னை வாழ்க்கையில்
உணர்த்தும்.''

**க. மோகன்ராஜ்**
இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

## அன்பு

''அன்புத் தோட்டத்தில்
பண்பு நீர் பாய்ச்சி
பாசச் செடி நட்டு
நட்பு எனும் மரம் வளர்ப்போம்''

**கா. தமிழரசி**
இளங்கலை வேதியியல் முதலாண்டு

## தன்னம்பிக்கை

''அன்புக்கு மறுபெயர் அம்மா
நம்மை பத்து மாதம்
கருவறையிலும்
பிறந்தபின் மனத்தில் வைத்துச்
சுமப்பவளும் தாய்தான்.
அவளின் அன்புக் கடலில் நம்
அன்பு ஒரு துளிதான்.
அந்தப் பாசக்கடலில்
கண்ணீர்த்துளிகள் வரக்கூடாது.
வந்தால் அது நம்மைச்
சுனாமியாகத் தாக்கும்.''

**எஸ். வெங்கடேசன்**
இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

## அழிக்கப்படும் இயற்கை

''கடல்நீர் ஓர் உன்னதப் படைப்பு.
மனிதன் அதனை அழிக்கும்
படைப்பு.
நீரால் மரங்கள் வளரும் -
மனிதனால் மரங்கள் அழியும்.
கடல் நமக்கு உப்பைத் தருகிறது
மனிதன் அதனைக்
குப்பையாக்குகிறான்.
கடல் ஒரு பேரழகு
மனிதனால் அது அடைகிறது
சீரழிவு.''

**ரா. நவீன்குமார்**
இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

## அம்மா

*''காயம் இல்லாமல் கனவுகள்*
*காணலாம் ஆனால்,*
*வலி இல்லாமல் வெற்றிகள்*
*காண முடியாது.*
*அறிமுகம் இல்லாமல் வந்தோம்*
*அடிக்கடிப் பேசிக் கொண்டோம்*
*உறவுகளுக்கு மேலே உயிர் ஆனோம்*
*காலங்கள் கடந்து சென்றாலும்*
*என்றும் முடிவில்லாமல்*
*தொடரவேண்டும்.*
*நம் அன்பும் நட்பும்*
*எதிர்பார்ப்புகள் இல்லாத*
*வாழ்க்கை இல்லை.*
*எதிர்பார்க்கிறேன் என்றும்*
*உன்னிடம் இருக்கும் இந்த*
*அழகான அன்பை.*
*தந்தையிடம் இருந்து மதிப்பு வரும்*
*தாயிடம் இருந்து பாசம் வரும்*
*மனைவியிடம் இருந்து*
*வாழ்க்கை வரும்.*
*சொந்தங்களிடம் இருந்து*
*உறவு வரும்.*
*நண்பர்களிடம் இருந்துதான்*
*மகிழ்ச்சி வரும்.*
*தேவதைகளைப் பற்றிச் சிந்தித்துக்*
*கொண்டிருக்கையில்*
*ஒரு தேவதை என்னை அழைத்தது*
*அம்மாவின் வடிவில்''*

***சா. குணசுந்தரி***
*இளங்கலை தமிழ் இலக்கியம் முதலாண்டு*

## எழுந்திரு பெண்ணே

*''தலைகுனிந்து நடந்தால்தான்*
*பெண் அன்று.*
*தலைநிமிர்ந்து நடந்தால்தான்*
*பெண் இன்று.*
*இதனால் தலைகுனிய வைத்தனர்*
*பலரைக்கொன்று.*
*தலை நிமிர்ந்தது தவறவில்லை.*
*நிமிர்ந்து பிறர் தலை*
*குனியவைத்ததுதான் தவறு.*
*உன் நடையில் தவறில்லை.*
*'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற*
*கூற்றை மாற்றி,*
*'ஒருத்திக்கு ஒருவன்' எனக் கூற*
*வைத்த உன் சிந்தனை தவறு.*
*பல பெண்களால் சில பெண்களும்*
*தவறான பார்வையில் துயரத்திற்குத்*
*தள்ளப்படுகிறார்கள்.*
*ஒரு பெண்ணுக்கு நல்ல ஆண்*
*தேடிய காலம் சென்று -*
*ஓர் ஆணுக்கு நல்ல பெண் தேடும்*
*காலம் வந்தது.*
*பெண்கள் அடங்கிக் கிடக்கவும்,*
*பிறரை அடக்கவும் வேண்டாம்.*
*உன் நடையில் தன்னடக்கத்தைக்*
*கொண்டு நடந்துசெல்*
*உன் வாழ்க்கை உயரும்''*

***மைதிலி தேவராஜன்***
*இளங்கலை கணிணி அறிவியல்*
*முதலாண்டு*

# நட்பு

''பகலுக்குச் சூரியன் சொந்தம்
சூரியனுக்கு வெளிச்சம் சொந்தம்
இரவுக்கு விண்மீன்கள் சொந்தம்
தாய்க்குப் பிள்ளைகள் சொந்தம்
உனக்கும் எனக்கும்
நட்பு மட்டுமே சொந்தம்.

மலர்கள் பேசலாம் வாசமாக
கடல் பேசலாம் அலையாக
வானம் பேசலாம் மழையாக
ஆனால் நீ பேசினாய்
என் இதயத்தில் நட்பாக.

ரோஜா செடியில் மலர்வது ரோஜாபூ
மல்லிகைச் செடியில் மலர்வது மல்லிகைப்பூ.
குளத்தில் மலர்வது தாமரைப்பூ.
நம் இதயத்தில் மலர்வது நட்(பூ)பு.

உன்னிடம் என் நினைவாக
எதுவும் இல்லை.
என்னிடம் உன் நினைவைத்தவிர வேறு
எதுவும் இல்லை.
பூத்த பூவை கிள்ளி விடாதே!
கிள்ளிய பூவை கசக்கிவிடாதே1
கசக்கிய பூவை எரிந்து விடாதே!
அதுபோல் நீ என்னை மறந்துவிடாதே!''

**கா.ரா. மகேஸ்வரி**
இளங்கலை தமிழ் இலக்கியம் முதலாண்டு

# கூட்டுப் புழுக்கள்

''வண்ணத்துப் பூச்சிகளாய்
பறக்கும் நேரங்களில்
என்றும் மறக்க முடியாத நட்புடன்
கல்லூரி வாழ்க்கை
பின் நோக்கிச் செல்கிறது.
பேருந்து ஜன்னலோர இருக்கைகள்
முகம் தடவும் தென்றல்
எல்லாம் என்னையும்
நம் கல்லூரி வாழ்வையும்
ஞாபகப் படுத்திடும்
கண்களில் இருதுளி நீரும்
உதடுகளில் புன்னகையும்
இதயத்தில் நட்பும்
பிரிவின் சம்பரதாயங்கள்.
அந்த நாளை வரவேண்டாம்
எனத் தடுக்க முடியாது -
கண்ணீரின் மென்மையால்
இதயத்தின் கணங்கள் குறையட்டும்
கல்லூரி வாழ்க்கை என்றும்
மகிழ்ச்சி தரும் பல்லவச் சிற்பங்கள்.
அவை அழியாத, அழிக்க
முடியாதவை.
நட்பு மறவாத இதயத்துடன்
இல்லறம் சேர
தோழியின் வாழ்த்துகள்.''

**செ. உதயசங்கரி**
இளங்கலை தமிழ் இலக்கியம் முதலாண்டு

# யானை

*யானைகள் இரண்டு வகைப்படும். அவை ஆசிய யானைகள். ஆப்பிரிக்க யானைகள். ஆப்பிரிக்க யானைகள் இரண்டு டன் எடையும் ஆசிய யானைகளைவிட இரண்டடி அதிக உயரமும் உடையவை. சிறிய தலையும் பெரிய காதுகளையும் கொண்டிருக்கும். ஆசிய யானைகள் பெரிய தலையும் சிறிய காதுகளையும் கொண்டிருக்கும். யானைகள் காட்டில் வாழும் போது கூட்டமாகத்தான் இருக்கும். அக்கூட்டத்திற்குப் பெண்யானைதான் தலைமை தாங்கும். யானையின் கர்பகாலம் 22 மாதங்களாகும். யானைகள் பாலூட்டி இனத்தைச் சார்ந்ததாகும். பஞ்ச காலத்தில், 40வயது முதமையடைந்த பெண் யானை காற்றடிக்கும் திசையில் 10 கி.மீ. தொலைவில் தண்ணீர் இருப்பதனைக் கண்டறிந்து மற்ற யானைகளை வழிநடத்திச்சென்று தண்ணீர் பருக வழிவகைசெய்யும். யானையின் இதயத்துடிப்பு சராசரியாக நிமிடத்திற்கு 22 முறை என்று கணக்கிடப் பெற்றுள்ளது.*

***குறிப்பும் தொகுப்பும்:***

***செ. உதயசங்கரி***
*இளங்கலை தமிழ் இலக்கியம் முதலாண்டு*

# நாளை

*''வாழ்க்கை என்பது ஒருமுறைதான்*
*வாழ்வதும் வீழ்வதும் உன்னிடம்தான்*
*சோதனை கண்டு பயந்தால்*
*சாதனை படைக்க முடியாது*
*நம்பிக்கையோடு நடைபோடு*
*நாளை பாரதம் உன்னோடு''*

***பெ. லோகநாதன்***
*இளங்கலை வேதியியல் முதலாண்டு*

# முயற்சி

*'' முயற்சியிலே உயர்ந்து நின்றோர்*
*இகழ்ச்சியை என்றும் அடைந்தில்லர்.*
*முயற்சி கொண்ட மனிதரைத்தாம்*
*முழுமனிதர் என்பர் சான்றோர்.*
*முயற்சி மட்டும் இருந்துவிட்டால்*
*விண்ணையும் நாம் வெல்லலாம்.*
*மண்ணையும் நாம் ஆளலாம்.*
*கதைகளில் என்றும் வாழலாம்.*
*காவியங்களாக நாம் ஆகலாம்.*
*முயற்சியோடே வாழ்ந்திடுவோம்*
*முழுமை பெற்று ஓங்கிடுவோம்''*

***செ. சரண்யா***
*இளங்கலை வேதியியல் முதலாண்டு*

# ஒரு துளி இரத்தம்

மனித உடலில் ஏற்படும் நோய்களைக் கண்டறிய ரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஆனால், ஒரு சொட்டு ரத்தத்தை வைத்தே ஒரு மனிதரின் உடலில் என்னென்ன நோய்கள் உள்ளன என்பதைக் கண்டறியும் கருவி ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித் துள்ளனர்.

பொதுவாக, மனித உடலில் ஏற்படும் நோயினைக் கண்டுபிடிக்கவே ரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஆனால், அதற்கு ஒரு சொட்டு ரத்தம் போதும். அதிக அளவில் எடுத்து வீணாக்கத் தேவையில்லை என அமெரிக்க விஞ்ஞானிகள் ரிஜினால்டு பார்ரோ மற்றும் அலோகிக் கர்னவால் ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

இவர்களில் அலோகிக் கான்வால் அமெரிக்க வாழ் இந்தியர் ஆவார். அவர்கள் நியூ ஜெர்சி தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தில் பேராசிரியர்களாகப் பணிபுரிகின்றனர்.

இவர்கள் கண்டுபிடித்திருக்கும் இக்கருவி கார்பன் நானோடியூப் தன்மையைக்கொண்டு செயல்படும் திறன் கொண்டதால், அதில் ஒரு சொட்டு ரத்தத்தை ஆராயும்போது அதிலுள்ள செல்கள் அனைத்தும் துல்லியமாக ஆராயப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**த. தீபிகா**
இளங்கலை வேதியியல் மூன்றாமாண்டு

# தந்தை நேசம்

''தந்தையே! நீர் உன் இரத்தத்தை
வியர்வையாக்கி என் தாகம் தீர்த்து,
இராப்பகலாய் உடலை வருத்தி
எனக்கு உணவைக் கொடுத்து,
நீ பட்டினியாய்க் கிடந்தேனும்
எனக்குப் பட்டுத்துணியும்
பஞ்சு மெத்தையும் அளித்து,
கல், மண் சுமந்து
வேலைசெய்தேனும்
எனக்குக் கல்வியைக் கொடுத்து,
என் வாழ்க்கை சிறப்பாய் அமைய
நல்ல நெறிகளைக் கற்றுக்கொடுத்து,
பகலில் எனக்குச் சேவகனாய்
இரவில் எனக்குக் காவலனாய்
இருந்து, என் அச்சம் தவிர்த்து
என்னைக் கரையேற்றிய தோணியே!
நான் வணங்கும் கடவுள் நீதானே!
என் அருமைத் தந்தையே!''

**சுமிதா சீனிவாசன்,**
இளங்கலை கணிதத்துறை முதலாண்டு அ பிரிவு

*சங்கச்சாரல் - 16*

# மொழியும் வாழ்வும்

**முனைவர் த. கண்ணன்**
தமிழ் உதவிப்பேராசிரியர்

*இயற்கையில் தோன்றிய உயிரினங்களுள் மனிதனும் ஒருவன். அம்மனிதனைச் சார்ந்து, அம்மனிதனில் தோன்றியவை மொழிகள். இம்மொழிகள் இயற்கை மொழிகள் என்றும் செயற்கை மொழிகள் என்றும் வகை பிரிக்கப் படுகின்றன. மனிதனுள் தோன்றிய இம்மொழிகள் அம் மனிதனைப் பிற உயிர்களிடம் இருந்து பிரித்துக் காட்டின. மனிதனை அறிவு, பண்பாடு போன்றநிலைகளில் உயரச் செய்தன. மனித உணர்வுகளைப் பதிவு செய்தன. கலைகளைக் காலங்கள் கடந்து கொண்டு சென்றன. அழியும் மனிதனில் தோன்றிய மொழி அவனை அழியா மனிதனாக்கியது.*

*மொழியின் இயல்புகளைப் பட்டியலிட்டுச் சொன்னால் அது நீண்டுகொண்டே செல்லும். மொழியின் நற்பண்புகளை அறிந்த சங்கப் புலவன் மனிதனின் வாழ்வு நன்மொழிபோல் அமைய வேண்டும் என்றுரைக்கின்றான்.*

*ஔவையார் இயற்றிய பாடல்களுள் குறுந்தொகை 15ஆவது பாடலும் ஒன்றாகும். இப்பாடல் செவிலித்தாய் கூற்றாக அமைகிறது. செவிலி என்பவள் தலைவியின் வளர்ப்புத் தாய்; தலைவியின் பெற்ற தாயாகிய நற்றாயின் தோழியும் ஆவாள். இச்செவிலி இந்தக் குறுந்தொகைப் பாடலில் என்ன சூழ்நிலையில் பேசுகின்றாள், என்ன பேசுகின்றாள் என்பதை முதலில் காண்போம்.*

*நற்றாயின் மகளான தலைவி தன் காதலனாகிய தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டாள். இத்தகவலைச் செவிலித்தாய் அறிகின்றாள். புலம்புகின்றாள், தவிக்கின்றாள். தலைவனைப் பற்றி அறிகின்றாள். தலைவனின் நற்பண்புகள் அறிந்து மகிழ்ச்சி யடைகிறாள். தலைவியின் வாழ்வு நல்விதமாய் அமையும் என்று அமைதியடைகிறாள்.*

*என்னதான் அமைதியுற்றாலும் இச்செவிலி இந்தத் தகவலை இருவருக்குமான வயது அதாவது, பருவம் பொருத்தம் நன்றாகவே உள்ளது என்பதை இதன்வழி கூறுகின்றாள்.*

*இங்குத் தலைவனைப் பற்றி இரண்டு செய்திகளை மட்டுமே*

கூறுகின்றாள். அவற்றுள் ஒன்றுதான் அவள் மடந்தைப் பருவத்தினள் என்பது. எதற்காக இதனைச் சொல்கின்றாள் எனில் தலைவியானவள் நீ நினைத்துக் கொண்டிருப்பதைப் போன்று சிறு வயதினள் அல்லள். அவள் வளர்ந்துவிட்டாள். தலைவனுடன் இணைந்து வாழ்வதற்குரிய பருவத்தை எய்திவிட்டாள் என்பதை உணர்த்து வதற்காக.

தலைவியைப் பற்றிக் கூறும் மற்றொரு செய்தியானது, பல வளையல்களை அணிந்த முன்கையை உடையவள் என்பதாகும். இதன்வழி, தலைவியின் அந்தக் கையைத் தலைவன் பற்றிவிட்டான் எனும் செய்தியை அறிவிக்கின்றாள்.

இதன்வழி நற்றாய் தன் மகளின் நிலையை அறிந்துகொள்வாள். இப்பொழுது தலைவன் எப்படிப்பட்டவன் என்றவினா நற்றாயின் மனத்திற்குள் உதயமாகும். எனவே, தலைவன் பற்றிய செய்திகளைக் கூறுகின்றாள் செவிலி.

முதலில் அவன் அணிந்துள்ள வீரக்கழலையும் கையில் உள்ள வேல் பற்றியும் கூறுகின்றாள். இதன்வழி அவனது வீரமும் பண்பும் பெறப்படும். பின்னர் தலைவனின் வயதைக் குறிப்பதற்காக அவனை விடலை என்கின்றாள்.

இவற்றால் பருவம் வந்த உன் மகள் தகுதியுடைய தலைவனுடன் சென்றுவிட்டாள் என்பது கூறப்படுகிறது.

உடன்போக்கில் தலைவியை அழைத்துச் சென்ற அத்தலைவன் அவளைத் திருமணம் செய்து கொண்டானா? என்ற வினா நற்றாயின் மனத்தில் உடனே தோன்றும். அதற்கான விடையாகவே செவிலி, ‘பறைபடப் பணிய மார்ப்ப’ என்று கூறுகிறாள். பாலையில் முரசு முழங்கவும் சங்கு ஒலிக்கவும் அவர்களின் திருமணம் நடை பெற்றுள்ளது என்பதை இவ்வடி சுட்டுகிறது.

திருமணம் நடந்துவிட்டது இனி அவர்களின் வாழ்வு எப்படி அமையுமோ என்ற கவலை தோன்றக் கூடும். அதற்கான விடையையும் செவிலி கூறுகின்றாள்.

வாழ்வு என்று வரும்போது பல கோணங்களில் சிந்திக்க வேண்டியதாக அமையும். இந்த வாழ்வு இன்பமானதாக அமையுமா?

*அந்த இன்பம் பயனுடையதாக இருக்குமா? நிலையானதாகவும் பண்பாட்டுடனும் நிகழுமா? எனப் பல்வேறு வினாக்களை எழுப்பும்.*

*இவ்வாறான வினாக்களுக் கெல்லாம் ஒரே வார்த்தையாக விடை கூறுகிறாள் செவிலி, அது 'நாலூர்க் கோசர் நன்மொழி போல வாயாகின்றே' என்று கூறுகின்றாள். அதாவது, நாலூர்க் கோசரது நன்மொழியைப்போல எப்படி நற்றாயிடம் கூறமுடியும். செவிலித்தாய் சொல்லப்போகும் இந்தச் செய்தியை நற்றாயால் தாங்கிக்கொள்ள முடியுமா? நற்றாயின் மனத்தைப் புண்படுத்தாத வகையில் இந்தச் செய்தியைச் சொல்லமுடியுமா? இப்பாடலில் வரும் செவிலி எப்படிச் சொல்லியுள்ளாள். அவள் எப்படிச் சொல்லியிருத்தாலும் இச்செய்திக்கும் மொழிக்கும் வாழ்வுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? பார்ப்போம்,*

***"பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு***
***தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய***
***நாலூர்க் கோசர் நன்மொழிபோல***
***வாயா கின்றே தோழி யாய் கழற்***
***சேயிலை வெள்வேல் விடலையொடு***
***தொகுவளை முன்கை மடந்தை நட்பே"***

*(குறுந்தொகை-15)*

*தலைவன் அழகிய வீரக்கழலை அணிந்தவன், செம்மையாகிய இலைபோன்ற வடிவத்தை உடைய வேலையுடையவன். விடலைப் பருவத்தினன்.*

*தலைவி, பலவளையல்களை அணிந்தவள். மடந்தைப் பருவத்தினள். இத்தலைவி இந்தத் தலைவனுடன் உடன்போக்கில் சென்றுள்ளாள் என்பதைச் செவிலியின் கூற்றில் அறிய முடிகிறது.*

*இங்குத் தலைவியானவள் திருமணத்திற்குரிய மடந்தைப் பருவத்தினள் என்பதும் அத்தலைவியை அழைத்துச் சென்றுள்ள தலைவனும் திருமணம் செய்து கொள்வதற்குரிய விடலைப் பருவத்தினன். அவளது வாழ்வு உறுதிபெற்றது என்கிறாள்.*

*இங்கு, வாழ்வின் இலக்கு மற்றும் தன்மைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை நன்கறிந்த செவிலி அவ்வாழ்விற்கான ஒப்புமையாக மொழியைக் குறிப்பிடுகிறாள்.*

*வாழ்வுடன் மொழி எப்படி ஒப்படியாகிறது? மொழி நன்மையுடையதாகவும் தீமையுடையதாகவும் அமையலாம். ஆனால், அவற்றை நன்மையுடையதாக ஆக்கிக்*

*கொள்ள வேண்டும். நன்மைகள் தந்து நன்மைகளைப் பிறருக்கும் தரக் கூடியதாக அமைத்துக் கொள்ள வேண்டும். ஒருவரை அவள் வாயிலிருந்து வெளிப்படுத்தும் சொற்கள் காப்பாற்றும் பாதுகாக்கும் வாழ வைக்கும். மாறாக அழிக்கவும் செய்யும். அப்படியெனில், ஒவ்வொருவரும் தன் மொழியை எப்படிக் கவனமுடன் பயன்படுத்த வேண்டும் என்பது புலப்படுகிறது. அவ்வாறாயின் வாழ்க்கையில் மொழிக்கான பங்கு என்ன என்பது உணரப்படும்.*

*இத்தலைவியின் வாழ்வு நன்மொழி போல் அமைந்தது என்பதைத் தான் ''நாலூர்க்கோசர் நன்மொழி போல'' என்றுரைக் கின்றாள்.*

*மனிதன் கண்டுணர்ந்த கலை களையும் பண்பாட்டையும் நாகரிக வளர்ச்சியையும் தொழில் நுட்பங்களையும் காலங்காலமாகக் காத்து நிற்பன மொழிகள். அம்மொழிசார் இலக்கிய, இலக்கண, வாய்மொழிப் பதிவுகள்.*

*ஒரு தலைமுறையின் வளர்ச்சியாக மற்றொரு தலைமுறை வளர்ச்சியடைய வேண்டுமாயின், அங்கு மொழிப் பயன்பாடு அவசியம் தேவையானதாகிறது.*

*மொழியைப் போன்றே மனிதனது வாழ்வும் வளர்ந்து வரும் தலைமுறைக்கு ஏற்றாற்போல பயன் உடையதாக இருக்க வேண்டும். தன்னோடு மட்டும் முடிந்து போகும் வாழ்க்கையை வாழ்தல் கூடாது. நம் வாழ்வில் நாமும் வாழ வேண்டும். பிறரும் வாழ வேண்டும். வரப்போகும் வர்க்கமும் வாழ வேண்டும்.*

*மொழி எப்படித்தானும் வாழ்ந்து பிறரையும் வாழச்செய்கிறதோ அவ்வாறே வாழ்வும் அமைய வேண்டும்.*
*இத் தலைவியின் வாழ்வு அவ்வாறே அமைந்துள்ளது என்பதைக் குறிக்கவே செவிலி நன்மொழியுடன் தலைவியின் வாழ்வை ஒப்பிட்டுக் கூறுகிறாள்.*

*வாழ்வை நல்வாழ்வாக்குவோம். வாழ்வில் பயன்படுத்தும் மொழியை நன்மொழியாக்கிக் கொள்வோம். மொழிபோல் வாழ்வோம், மொழிபோல் வாழச் செய்வோம்.*

**சாரலில் மீண்டும் நனைவோம்...**

## அம்மா

*"கண்களால் காணும் முன்*
*காதினால் கேட்கும் முன்*
*இரத்தத்தை உணவாக்கிப்*
*பாசத்தைப் பகிர்ந்தளித்து*
*அன்பே உருவானவள்.*
*அவள் வேறுயாருமில்லை*
*என்னை யாரென்று தெரியும்முன்*
*கருவிலேயே காதலித்த*
*என் அம்மா"*

***ஆர். அனுஜா,***
*இளங்கலை ஆங்கில இலக்கியம் முதலாண்டு*

## அப்பா

*"என்னைக் காக்கும் தெய்வம்*
*தவறுகளைத் திருத்தும் ஆசான்*
*அன்பு காட்டும் அரசன்*
*இன்பத்தில் கைதட்டி,*
*துன்பத்தில் கைகொடுக்கும் நண்பன்*
*உன்னினும் தெய்வம் யார்?"*

***ஜெ. செல்வா ஆண்டனி சந்தோஷ்,***
*இளங்கலை ஆங்கில இலக்கியம் முதலாண்டு*

## நட்பு

*"உதடுகள் பிரிந்தாலும்*
*உறவுகள் உதிர்ந்தாலும்*
*உயிர் உள்ளவரை உணர்வுகளில்*
*அழியாதது நட்பு"*

***ந. தாரணி,***
*இளங்கலை வேதியியல்துறை முதலாண்டு*

## தாய்

*"கண்கள் இல்லாமல் ரசித்தேன்*
*காற்று இல்லாமல் சுவாசித்தேன்*
*வார்த்தைகள் இல்லாமல் பேசினேன்*
*என்னை இந்த அழகிய உலகுக்கு*
*அறிமுகப்படுத்திய*
*அற்புதமான என்*
*தாயின் கருவறையில்"*

***டி. சுதா,****இளங்கலை துகிலியல் மற்றும்*
*ஆடைவடிவமைப்புத்துறை முதலாண்டு*

## பாசம்

*"அம்மா அன்று*
*கொப்பூல் கொடியை அறுத்தது*
*நம் உறவைப் பிரிப்பதற்கு அல்ல.*
*அது நம்*
*பாசத் தொடக்கத்திற்காக*
*வெட்டப்பட்ட ரிப்பன்"*

***ஆர். கீதா,*** *இளங்கலை துகிலியல் மற்றும்*
*ஆடைவடிவமைப்புத்துறை முதலாண்டு*

## வனம்

*"நட்பு என்பது சோலைவனம்*
*அன்பு என்பது பிருந்தாவனம்*
*உறவு என்பது நந்தவனம்*
*இம்மூன்றில் பிரிவு என்பது*
*பாலைவனம்"*

***ஆர். கீதா,****இளங்கலை துகிலியல் மற்றும்*
*ஆடைவடிவமைப்புத்துறை முதலாண்டு*

# புனித தீர்த்தம் தயாரித்தல்

த. பழனிவேல்,
முதுகலை கணிணிப் பயன்பாட்டியல்
மூன்றாமாண்டு

இந்தியாவின் ஆன்றோர்கள் புனித ஆலயங்களின் வழிபாடுகள் மூலம் சூட்சுமமாக உடல் நோயும் உளநோயும் நீங்கி நலம் பெற வழிவகுத்துள்ளனர்.

ஆலயங்களை வலம் வருதல், அங்கங்கள் பூமியில் பட விழுந்து வணங்குதல், அங்கப்பிரதட்சணம் செய்தல், காவடி எடுத்தல், திருமண் இடுதல், திருநீறு, சந்தனம், குங்குமம் இடுதல், திருத்துழாய் (துளசி இலை), வில்ல இலை ஆகியவற்றைப் பயன்படுத்துதல், போன்ற ஆன்மிக செயல்பாடுகள் அனைத்தும் உடலும் உள்ளமும் நலம்பெற அமைந்துள்ளன. ஆலய வழிபாட்டு முறைகளில் தலைசிறந்ததாகப் புனித தீர்த்தம் வழங்குதல் அமைந்துள்ளது.

வைணவ திருத்தலங்களில் வழங்கும் துளசி தீர்த்தம் இரத்தத்தைச் சுத்தம் செய்வதுடன் உடலில் பிராணசக்தி மற்றும் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரித்து உடலை வலுப்படுத்து கின்றது.

துளசி தீர்த்தம் தொடர்ந்து அருந்தி வருபவர்களுக்குப் புற்றுநோய் எற்பட வாய்ப்பில்லை.

சைவத் திருத்தலங்களில் வழங்கும் வில்வதீர்த்தம் வயிற்றுக்கடுப்பு, மேகவாயு போன்றவற்றைப் போக்குகின்றது. குடல்புண்ணைக் குணப்படுத்துகின்றது.

ஏலம், இலவங்கம், வால்மிளகு, ஜாதிபத்திரி, பச்சைக் கற்பூரம் ஆகியவற்றுள் முதல்நான்கினை ஒரு பங்கு எடுத்துக்கொண்டு அவற்றை உலர்த்தி, இடித்துப் பொடித்துக் கொள்ளவும். பின்னர் பச்சைக் கற்பூரத்தைக் கால்பங்கு எடுத்துப் பொடித்து இதனுடன் கலந்து கொள்ளவும். இதனைக் கொள்கலனில் பதனம் செய்து பூசை அறையில் வைக்கவும். இந்தத் தீர்த்தப் பொடியை ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து ஒரு தாமிரக் குவளையில் தண்ணீருடன் கலந்து ஓர் இரவு வைத்திருந்து காலையில் வெறும் வயிற்றில் அருந்தவேண்டும். சைவர்கள் இதனுடன் வில்வ இலையையும் வைணவர்கள் துளசி இலையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இத்தீர்த்தத்தைத் தொடர்ந்து பருகிவந்தால், பலவகையான நோய்கள் நம்மைப் பற்றாமல் இருக்கும்.

# அதிசயம்

"உலகம் சொல்கிறது,
'தாஜ்மஹால் அதிசயம்' என்று
'பைசா கோபுரம் அதிசயம்' என்று
இவ்வுலகில் எத்தனை ஆயிரம்
அதிசயங்கள் இனி வந்தாலும்
நானிருந்த தாயின் கருவறையே
எனக்கு அதிசயம்"

**ச. ஸ்ரீ மீனாட்சி,**
இளங்கலை வேதியியல்துறை முதலாண்டு

# கவிதை எழுதினேன்

"ஒரு ரோஜா மொட்டு
அதைப் பறிக்கத் தொட்டு
கையில் முள் பட்டு
வந்ததே ரத்தச் சொட்டு
நான் எழுதினேன் கவிதை மொட்டு"

**ம. கோவர்த்தினி,**
இளங்கலை வேதியியல்துறை முதலாண்டு

# மரம் வளர்ப்போம்

"மண்ணை நேசித்தோம்
விண்ணை நேசித்தோம்
மதங்களைக் கூட நேசித்தோம்
மரங்களை நேசித்தோமா?
மரங்களை வளர்க்க ஆளில்லை
இருக்கும் மரத்தை அறுக்க ஆளுண்டு.
புதிதாய் நட ஆளில்லையே!
பருவநிலை மாறிப் போச்சு
அது பரவாயில்லை என்று பழகிப்போச்சு.
புது உலகம் மலர மரம் நட்டு வை.
நாட்டைப் பசுமையால் போர்த்திவை.
இயற்கையோடு இணைந்து வாழ
மகத்தான பாரதம் படைப்போம்"

**பா. நந்தினி,**
இளங்கலை வேதியியல்துறை முதலாண்டு

# நட்பு

" விரல் விட்டு எண்ணமுடியாத
நண்பர்கள் மத்தியில்
என்றும் என் விரல் கோர்த்து
நடக்கும் நட்பின் அடையாளம் நீ"

**வ. பவித்ரா,**
இளங்கலை வேதியியல்துறை முதலாண்டு

# தன்னம்பிக்கை

"உலகமே உன்னை வெறுத்தாலும்
உன்னை நேசிக்க நான்
இருக்கிறேன் - என்னை
எங்கும் தேடாதே.
நான் உன்
இதயத்தில் இருக்கிறேன்"

**எஸ். பூர்ணிமா,**
இளங்கலை வேதியியல்துறை முதலாண்டு

# சுவாமி விவேகானந்தர்

*விவேகானந்தர் 1863 ஜனவரி 12ஆம் நாள் கல்கத்தாவில் விசுவநாத் தத்தாவுக்கும் புவனேஸ்வரி தேவிக்கும் மகனாகப் பிறந்தார். தாய் மொழி வங்காளம். சிறு வயதிலேயே மிகுந்த நினைவாற்றல் கொண்டவராகவும் சிறந்த விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார். இசையும், இசை வாத்தியங்களும் பயின்றார். இள வயது முதலே தியானம் பழகினார். பகுத்தறிவாளராகவும் திகழ்ந்தார்.*

*பள்ளிப்படிப்பு முடிந்தவுடன் 1879 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள மாநிலக் கல்லூரியில் (Presidency College) சேர்ந்தார். பின்னர் ஸ்காட்டிஷ் சர்ச்சு கல்லூரியில் (Scottish Church College) தத்துவம் பயின்றார். அங்கே மேல்நாட்டு தத்துவங்கள், மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வரலாறு முதலியவற்றைப் படித்தறிந்தார். இச்சமயத்தில் அவர் மனத்தில் இறை உண்மைகளைப் பற்றிப் பல கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்தன. இறைவனைப் பலர் வழிபடுவதும், உலகின் வேறுபாடுகளும் ஏற்றத் தாழ்வுகளும் நிறைந்துள்ளதும் அவருக்கு முரண்பாடாகத் தோன்றின. இது பற்றிப் பல பெரியோர்களிடம் விவாதித்தார். மேலும், அக்காலகட்டத்தில் பிரபலமாயிருந்த பிரம்ம சமாஜத்தில் உறுப்பினரானார். ஆனால், இம்முயற்சிகள் யாவும் அவர் கேள்விகளுக்குத் தகுந்த விடையளிக்க முடியவில்லை.*

*இறை உண்மைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக, இராமகிருஷ்ணரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரிடம் சென்றார் விவேகானந்தர். ராமகிருஷ்ணரை முதன் முதலாக விவேகானந்தர் சந்தித்த ஆண்டு 1881. எதையும் பகுத்தறிந்து ஏற்றுக் கொள்ளும் விவேகானந்தரால் முதலில் இராமகிருஷ்ணரின் இறைவனைப் பற்றிய கருத்துக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறைவழிபாட்டையும் உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை.*

*இராமகிருஷ்ணரின் போதனைகள், உருவ வழிபாடு அல்லது அருவ வழிபாடு என்று ஒரே தனி வழியினைப் போதிக்காமல், இரண்டு வழிகளிலும் இருக்கும் உண்மையை உணர்த்துவதாக இருந்தன. இராமகிருஷ்ணரின் ஈடுபாட்டால்,*

*விவேகானந்தரால், பக்தி மார்க்கம், மற்றும் ஞான மார்க்கம், இரண்டின் அவசியத்தினையும் புரிந்து கொள்ள முடிந்தது.*

*1886 ஆம் ஆண்டு இராமகிருஷ்ணர் இறந்த பின் விவேகானந்தரும் இராமகிருஷ்ணரின் மற்ற முதன்மை சீடர்களும் துறவிகளாயினர். பின்னர் நான்கு ஆண்டுகள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் சுற்றினார் விவேகானந்தர். தன்னுடைய இந்தப் பயணங்கள் மூலம் இந்தியாவிலுள்ள அனைத்து பகுதிகளின் கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை நிலை போன்றவற்றை அனுபவித்து அறிந்தார்.*

*அச்சமயத்தில் இந்திய மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் கீழானதாக இருந்தது. மேலும், அது இந்தியர் ஆங்கிலேயரிடம் அடிமைப்படிருந்த காலமாகும். தன் பயண முடிவில் 24 டிசம்பர் 1892 இல் கன்னியாகுமரி சென்ற விவேகானந்தர் அங்கே கடல் நடுவில் அமைந்த ஒரு பாறை மீது மூன்று நாட்கள் தியானம் செய்தார். அந்த மூன்று நாட்கள் இந்தியாவின் கடந்த காலம், நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் குறித்து தியானம் செய்ததாகப் பின்னர் அவர் குறிப்பிட்டுள்ளார். இன்றும் அந்தப் பாறை விவேகானந்தர் நினை விடமாகப் பராமரிக்கப் பட்டு வருகிறது.*

*கன்னியாகுமரியில் இருந்து சென்னை வந்த விவேகானந்தரிடம், அமெரிக்காவின் 1893ஆம் ஆண்டு உலக சமய மாநாட்டில் இந்து மதம் சார்பாக கலந்து கொள்ளுமாறு சென்னை நகர இளைஞர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதை ஏற்றுக்கொண்ட விவேகானந்தர் அமெரிக்கா பயணமானார். சிகாகோவின் உலகச் சமய மாநாட்டில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளுக்கு அந்நாட்டில் பெரும் வரவேற்பு கிடைத்தது. மேலும் சில ஆண்டுகள் மேலைநாடுகளில் தங்கி, பல சொற்பொழிவுகள் ஆற்றி வேதாந்த கருத்துக்களை அவர்களிடம் அறிமுகப் படுத்தினார். நியூயார்க், மற்றும் லண்டன் நகரங்களில் வேதாந்த மையங்களை நிறுவினார்.*

*1897 ஆம் ஆண்டு இந்தியா திரும்பியவுடன் கொழும்பு முதல் கல்கத்தா வரை அவர் ஆற்றிய பேச்சுக்கள், அப்போது கீழ்நிலையில் இருந்த இந்தியரை விழிப்புறச் செய்வதாகவும், இளைஞர்கள் தம்முள் இருந்த ஆற்றல்களை*

உணரும்படிச் செய்வதாகவும் அமைந்ததாக கருதப்படுகிறது. பின்னர் கல்கத்தாவில் இராமகிருஷ்ண இயக்கம் மற்றும் மடத்தை விவேகானந்தர் நிறுவினார். ஜனவரி 1899 முதல் டிசம்பர் 1900 வரை இரண்டாம் முறையாக மேல்நாட்டு பயணம் மேற்கொண்டார்.



1902 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் நாள், தனது 39ஆம் வயதில் பேலூரில் விவேகானந்தர் காலமானார். இன்று அவர் நிறுவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடம் உலகம் முழுவதும் கிளைகள் பரவி செயல்பட்டு வருகிறது.

**பொன்மொழிகள்**

- "கடவுள் இருந்தால் அவனை நாம் காணவேண்டும். ஆத்மா இருந்தால் அதனை நாம் உணரவேண்டும். அப்படியில்லை எனில் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு செய்வதைவிட நாத்திகனாக இருப்பதே மேல்"
- "சுயநலமின்மை சுயநலம் என்பவற்றைத் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை."
- "நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்."
- "வலிமையே மகிழ்ச்சிகரமான நிரந்தரமான வளமான அமரத்துவமான வாழ்க்கை ஆகும்."
- "இளைஞர்களே தேசமுன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக கொடுங்கள்."
- "சுயநலம் என்பதை அறவே தூர எறித்துவிட்டு வேலை செய்யுங்கள்."
- "நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்."
- "உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவான்."
- "நான் இப்போது இருக்கும் நிலைக்கு நானே பொறுப்பு."

**கருத்தும் தொகுப்பும்:**

**டி. அனுப்பிரியா,**
இளங்கலை வேதியியல்துறை
முதலாண்டு

# கவனம்

''அதிகம் பேசி உன்னை
ஆடையாளம் காட்டிக்கொள்ளாதே!
அடையாளம் காட்ட வேண்டிய
தருணத்தில்
அமைதியாக இருந்துவிட்டு
அடையாளமின்றி மடிந்துவிடாதே!''

**வி.எம். ஹரிஹரன்,**
இளங்கலை கணிணி அறிவியல்
இரண்டாமாண்டு அ பிரிவு

# பூமொழி

''காலைமுதல் மாலை வரை
சிரித்தேன் - பரிசாக
மரண தண்டனை கிடைத்தது'' எனப்
பூக்கள் கூறின.

**எஸ். பூர்ணிமா,**
இளங்கலை வேதியியல்துறை முதலாண்டு

# இனிய வாழ்வு

''நினைவுகள் நிஜமாகும்
ஏன்று நினைத்து இருந்தேன்
அவை ஒரு நொடியில் கனவாய்
மறைந்தன.
கனவை நம்பி இருந்த எனக்கு
நிஜங்கள் தெரியாமல் போய்விட்டது.
அவை என்னை மாற்றவில்லை
நான்தான் அவற்றைக் கண்டு
வளர்ந்துவிட்டேன்
துன்பம் என்னும் குழியில் விழுந்து
எழமுடியாமல் தவித்தேன்
எதிர்காலம் என்னும் நட்பின் கயிறு
என்னைத் தாங்கியதால்
துன்பங்கள் மறைந்து இன்பங்கள்
தோன்றின
அவை வெறும் துன்பங்கள் அல்ல
என் வாழ்வு நிஜத்தின் அனுபவ
இன்பங்கள்''

**எஸ். மஞ்சுபார்கவி,**
இளங்கலை கணிணி அறிவியல்
இரண்டாமாண்டு அ பிரிவு

# பொன்மாலைப்பொழுது

வாரம்தோறும் செவ்வாய் மற்றும் வியாழன் கிழமைகளில் மாலை 04.05 மணிமுதல் 04.30. மணி வரைத் தமிழ்த் துறையிலிருந்து பொன்மாலைப்பொழுது என்ற நிகழ்ச்சி நடத்தப்பெறும்.

இந்நிகழ்ச்சியில் மாணாக்கர்கள் தங்களின் படைப்பாற்றலை வெளிப் படுத்தலாம்.

கடந்த வாரம் நடைபெற்ற பொன் மாலைப்பொழுது நிகழ்ச்சியில் எட்டுக் கவிதைகள் வாசிக்கப் பெற்றன. இரண்டு கதைகள் கூறப் பெற்றன. அந்நிகழ்வின் புகைப்படங்கள் இவ் இதழின் பின்பக்க உள் அட்டையில் வெளியிடப் பெற் றுள்ளன.

# கார்கில் போர்

***'போராட்டம் தான் வாழ்க்கை***
***போராடுபவன் தான் மனிதன்***
***போர்கள் மாறிக்கொண்டிருக்கும்***
***போராட்டம் மாறாது'***

*என்ற கவிதைக்கேற்ப மனிதனின் வாழ்க்கையில் அனைத்துமே போரட்டம்தான். போர்கள்தான் அப்படிப்பட்ட ஒரு கடும் போரைப் பற்றிக் கண்ணீருடன் சொல்லும் கணம் இது.*

*இந்தியா மறக்க முடியாத காலம் அது. அதுவும் அந்தப் போர் நடைபெற்ற காலம் மிகத் துயரமானது. அந்தப் போர் கார்கில் போர்தான்.*

*கார்கில் போர் 1999ஆம் ஆண்டு மே மாதம் தொடங்கி ஜூலை மாதம் வரை நடைபெற்றது. இது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடைபெற்ற மிகவும் கடுமையான போராகும். இந்தப் போர் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் கார்கில் நகரில் அருகில் நடந்தது. மே மாதம் 1999 இல் பாகிஸ்தான் ராணுவமும் காஷ்மீர் போராளிகளும் பாகிஸ் தானிலிருந்து கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி இந்தியாவில் நுழைந்தனர். இரண்டு மாதங்களால் மிக உயரத்தில் நடந்த போரில் இந்திய வான்படை போராளிகள் மீது தாக்குதல் செய்து அவர்கள் திரும்பிக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்குத் திருப்பியனுப்பினர். போர் நிகழும் பொழுது பாகிஸ்தான் அரசு போரைச் சேரவில்லை என்று கூறியுள்ளது. ஆனால், போர் முடிந்ததுக்குப் பின்னர் பாகிஸ்தான் படையினர் காஷ்மீர் போராளிகளுக்கு உதவி செய்துள்ளது என்று தகவல் வெளிவந்துள்ளது. இந்தப் போர் காரணமாக இந்திய இராணுவத்துக்கு நிதியுதவி தேவைப்பட்டது. பாகிஸ்தானின் பொருளாதாரமும் அரசும் இந்தப் போர் காரணமாகப் பலவீனமானது. இந்தப் போர் முடிந்து அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் பாகிஸ்தான் இராணுவத் தலைவர் பர்வேஸ் முஷாரப் இராணுவப் புரட்சி செய்து பிரதமர் நவாஸ் செரிப்பைப் பதவியில் இருந்து அகற்றினார். இந்தப் போரில் இந்தியா வெற்றி பெற்று காஷ்மீரைக் கைப்பற்றியது. கார்கில் போரில் உலக வரலாற்றில் முதலாம் தடவை இரண்டு அணு ஆயுதங்கள் பெற்றிருந்த நாடுகளுக்கு இடையில் இந்தப்போர் நடைபெற்றது. இதில் ஏராளமான இழப்புகள் ஏற்பட்டன.*

*இந்திய இராணுவ வீரர்கள் 527 பேர் பலியாயினர். மேலும் 1,363 பேர் படுகாயம் அடைந்தனர். ஒருவர் போர்க் கைதியாகப் பாகிஸ் தானுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.*

*பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் பலர் பலியாயினர். 665பேர் படுகாயம் அடைந்தார். எட்டுப்பேர் போர்க்கைதியாக இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டனர்.*

***‘இழப்புகள் அதிகமானாலும்***
***இன்பங்களை அள்ளித்தந்த***
***இந்திய வீரர்களுக்குத்***
***தலைவணங்குவோம்.’***

***பெ. லோகநாதன்,***
*இளங்கலை வேதியியல் முதலாண்டு.*

## அறிவிப்பு

கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறை, பட்டாசு நகர் அரிமா சங்கத்துடன் (சிவகாசி) இணைந்து “பலதுறை நோக்கில் கண்கள்” என்ற பொருண்மையில் ஒருநாள் தேசியக் கருத்தரங்கினை 20.09.2013 ஆம் நாள் நடத்த உள்ளது. பேராளர்கள் கட்டணம்: 400.00, ஆய்வாளர்கள் கட்டணம்: 250.00. கட்டுரைகளைப் பெறும் இறுதி நாள்: 16.08.2013 தொடர்புக்கு:

முனைவர் மா. கார்த்திகேயன்,
தமிழ்த்துறைத்தலைவர்,
**9894953535.**
முனைவர் பெ. கணேசமுருகன்,
9786358617.

# நான்காம் தமிழ்ச்சங்கம்

***முனைவர் ப. சரவணன்***
*தமிழ் உதவிப்பேராசிரியர்*

*முதல், இடை, கடையென்னும் முச்சங்கங்களும் அழிவுற்று சிதைந்தன. கடைச்சங்க பாண்டி மன்னன் உக்கிர பெருவழுதிக்குப் பின் கி.பி. 250இல் கடைச்சங்கம் முழுமையாய்ச் செயலிழந்து விட்டது. பண்டைய நாளில் தமிழ் மொழிக்கும், தமிழ்ச் சங்கத்திற்கும் இருந்து வந்த ஏற்றத்தையும், பின்நாளில் தமிழுக்கு ஏற்பட்ட தாழ்வையும் எண்ணி வருந்திய பாண்டியத்துரைத் தேவர், மீண்டும் தமிழ்ச்சங்கம் அமைத்து தமிழ் நிலை ஏற்றம் பெற்று, பண்டைய நிலைக்கு உயர வேண்டும் என்னும் பேரார்வப் பெருக்கால் 1651 ஆண்டுகளுக்குப்பின் 1901 ஆம் ஆண்டில் மதுரை மாநகரில் நான்காம் தமிழ்ச் சங்கம் அமைத்தனர்.*

*‘சேது சமஸ்தானம்’ என அழைக்கப்பட்ட இராமநாதபுரம் மாமன்னராக விளங்கிய பாண்டித் துரைத்தேவர், வள்ளல் பொன்னுசாமி - பர்வதவர்த்தினி*

*நாச்சியார் தம்பதிக்கு 1867ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் தேதி இராமநாதபுரம், இராஜவீதி 'கவுரி விலாசம்' என்ற இல்லத்தில் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் உக்கிரபாண்டியன். நாடறிந்த பெயரே பாண்டித்துரைத் தேவர். பொன்னுசாமி தேவர் இறந்தபோது பாலகராக இருந்த பாண்டித்துரைத் தேவரை வளர்க்கும் பொறுப்பை ஏஜண்ட் சேஷாத்திரி அய்யங்கார் ஏற்றார்.*

*அழகர் ராஜு எனும் புலவர் இளம் பருவம் முதல் பாண்டித்துரைத் தேவருக்குத் தமிழ் அறிவை ஊட்டி வந்தார். வக்கீல் வெங்டேசுவர சாஸ்திரி ஆங்கில ஆசிரியராய் இருந்தார். பாண்டித்துரைத் தேவர் தமிழ், ஆங்கில மொழிகளில் புலமை பெற்றார்.*

*1901ஆம் ஆண்டு சொற் பொழிவாற்றுவதற்காக வள்ளல் பாண்டித்துரைத்தேவர் மதுரை வருகை தந்தார். அப்போது, 'திருக்குறள் பரிமேலழகர் உரை' நூலை, விழா ஏற்பாடு செய்த அமைப்பாளரிடம் கேட்டார் தேவர். எங்கு தேடியும் அந்நூல் கிடைக்காதது கண்டும், பாண்டிய மன்னர்கள் முச்சங்கம் கண்டு முத்தமிழ் வளர்த்த மதுரையில், திருக்குறள் பரிமேலழகர் உரை கிடைக்காதது கண்டும், தமிழ்ப் பற்றுள்ள தேவரின் மனம் வருந்தியது.*

*தேவர் உடனடியாக, தமிழ் வளர்த்த மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். பழந்தமிழ் நூல்கள் அனைத்தையும் வெளியிட விரும்பினார். தமிழ்ச் சங்கம் சார்பில் தரமான தமிழ்க் கல்லூரியும் அமைத்தார் தேவர்.*



*பாண்டித்துரைத்தேவர் தலைமையில் 1901ஆம் ஆண்டு மே 24ஆம் தேதி, மதுரை மாநகரில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ, பெரும்புலவர்களின் ஆலோசனைக் கூட்டம் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் கூட்டப்பட்டது.*

நற்றமிழ் வளர்த்த மதுரையில் பாண்டித்துரைத்தேவர், தலைவராக வீற்றிருக்க 1901ஆம் ஆண்டு செப்டம்பர் 14ஆம் தேதி நான்காம் தமிழ்ச்சங்கம் மலர்ந்து, தமிழ் மணம் வீசியது.

அந்நாளில்தான் பழந்தமிழ்க் கருவூலமாக, பாண்டியன் நூலகமும் உருவானது. 'தமிழ் ஆய்வு மையம்' அமைத்த பாண்டித்துரைத்தேவர், மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் சார்பில், ஆய்வு நுணுக்கமும், ஆழமான புலமையும் மிக்க பெரும் புலவர்களின் கட்டுரைப் பெட்டகமாக 1903இல் 'செந்தமிழ்' என்னும் நற்றமிழ் மாத இதழும் மலரச் செய்தார். அந்த 'செந்தமிழ்' ஏடு நூற்றாண்டு விழா கண்ட ஏடு என்பது குறிப்பிடத்தக்கது.

சேது சமஸ்தானப் பெரும் புலவர்களாக விளங்கிய தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர், இரா.இராகவையங்கார், மு.இராகவை யங்கார், அரசன் சண்முகனார், இராமசாமிப்புலவர், சபாபதி நாவலர், சிங்காரவேலு முதலியார், நாராயண அய்யங்கார், சுப்பிரமணியக் கவிராயர், சிவஞானம் பிள்ளை, சிவகாமி ஆண்டார், யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர், புலவர் அப்துல்காதிர் இராவுத்தர், எட்டயபுரம் சாமி அய்யங்கார், பரிதிமாற்கலைஞர், அரங்கசாமி அய்யங்கார், சி.வை. தாமோதரம் பிள்ளை ஆகியோரின் தரமான படைப்புகள் வெளிவர, மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடான 'செந்தமிழ்' ஏடே உதவியது.

பிலவ ஆண்டு ஆவணித் திங்கள் 13ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை சித்திரை மீன் கூடிய நன்னாளில் 14.09.1901 பகல் 1.30 மணிக்கு மேல் 2.45 மணிக்குள் மதுரை சேதுபதி உயர்பள்ளி மண்டபத்தில் 'நான்காம் தமிழ்ச் சங்கம்' வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பட்டது. அதே நன்னாளில்

1. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை,
2. பாண்டியன் புத்தகசாலை,
3. நூலாராய்ச்சி சாலை என்பனவும் தொடங்கப்பெற்றன.

- நான்காம் தமிழ்ச்சங்கம் பொழுது போக்குக்காகவோ, பொருள் ஈட்டுவதற்காகவோ, அரசியல் செல்வாக்குப் பெறுதற்காகவோ அமைக்கப்பட்ட அமைப்பு அல்ல.
- அரசின் பொருட்கொடையையோ, பல்கலைக் கழகங்களின் நல்குதலையோ எதிர்பார்த்து தொடங்கப்பட்டதும் அல்ல.

○ தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், முச்சங்கம் கண்டு முன்பு தமிழ் மொழி பெற்றிருந்த உச்ச நிலைக்கு மீண்டும் உயர்த்த வேண்டும் என்ற நன்னோக்கோடும் உருவாக்கப்பட்ட சங்கமே நான்காம் தமிழ்ச்சங்கம்.

○ தொடக்க நாளிலே உருவாக்கப்பட்ட சங்கத் தீர்மானங்கள்.

○ நான்காம் தமிழ்ச்சங்கத் தொடங்க விழாவிற்கு மன்னர் பாசுகர சேதுபதியவர்கள் தம் பரிவாரங்கள் புடைசூழ வந்திருந்தார். சேதுநாட்டு அவைப் புலவர்களும் பாண்டித்துரை தேவர் தம் அவைப் புலவர்களும் குழுமினர். பெரும்புலவர்களாகிய உ.வே. சாமிநாதைய், சடகோப ராமாநுசாச்சாரியார், ராகவ ஐயங்கார், பரிதிமாற் கலைஞர், சண்முகம் பிள்ளை விழாவிற்கு வந்திருந்தனர். மதுரை மாநகரமே விழாக்கோலம் கண்டது. சங்கத் தொடக்க நாளிலேயே கீழ்க்காணும் ஒன்பது தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

○ தமிழ்க் கல்லூரி உண்டாக்குதல்.

○ தமிழ் ஏடுகளை அச்சிட்டு பயன்படுமாறு தொகுப்பது.

○ வெளிவராத அரியநூல்களை அச்சிட்டுப் பரப்புதல்.

○ வடமொழி ஆங்கில நூலைகளை தமிழில் மொழி பெயர்த்தல்

○ தமிழ்க் கல்வி பற்றிய செந்தமிழ் இதழ் வெளியிடுதல்.

○ தமிழில் தேர்வு நடத்தி பட்டமும் பரிசும் வழங்குதல்.

○ தமிழ் அறிஞர்களைக் கொண்டு பேருரையாற்றச் செய்தல்.

○ தமிழில் திறமிக்க பெருமக்களை ஒன்று கூட்டி தமிழாராய்தல்.

○ வேண்டத்தக்க புது நூல்களும் புத்துரைகளும் படைத்து அவற்றை அரங்கேற்றுதல்

இந்த ஒன்பது நோக்கங்களை நிறைவேற்றத்தக்க ஏழு அமைப்புகள் வெற்றிகரமாக இயங்கின.

அவை:

1. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை.
2. பாண்டியன் புத்தக சாலை.
3. நூலாராய்ச்சி சாலை.
4. கல்விக் கழகம்.
5. தமிழ்ச் சங்க முத்திராசாலை (அச்சகம்)
6. செந்தமிழ் என்னும் திங்களிதழ்
7. தமிழ்த் தேர்வு

என்பவைகளாம்.